# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 12, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மத்திய அரசுக்கு ஆக்கபூர்வ ஒத்துழைப்பை தமிழக அரசு வழங்கும் என்று பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற நீதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர் ஜோசப் விஜய் உறுதியளித்தார்.

(i) மேலும், நீட் தேர்வு முறை கூடாது, தமிழகத்துக்கான கல்வி நிதி ரூ.3,284 கோடியை விடுவிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளையும் அவர் முன்வைத்தார்.

(ii) தில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகை கலாசார மையத்தில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் அனைத்து மாநில முதல்வர்கள், துணைநிலை ஆளுநர்கள் பங்கேற்ற நீதி ஆயோக் 11-ஆவது கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற முதல்வர் ஜோசப் விஜய் பேசியதாவது:

- மத்திய அரசுடன் ஆக்கபூர்வமான ஒத்துழைப்புடன் செயல்படு வதற்கு தமிழக அரசு உறுதிபூண்டுள்ளது. 2047-க்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான நமது அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், 2036- ஆம் ஆண்டுக்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர்வதற்கு தமிழ்நாடு பணியாற்றி வருகிறது.

(iii) தமிழகத்தில் நிறைவேற்றப்படும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு விரைவாக நிதி வழங்க வேண்டும் என்று நீதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர் ஜோசப் விஜய் வலியுறுத்தினார். இது தொடர்பாக அவர் மேலும் பேசியதாவது:

- தமிழ்நாட்டின் 1,076 கிலோ மீட்டர் நீள கடற்கரைப் பகுதி அடிக்கடி புயல்கள் மற்றும் வெள்ளப் பேரிடர்களால் பாதிக்கப்படுகிறது. எனவே, கடலோர நகரங்களில் நிரந்தர வெள்ளத் தடுப்புக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும், உயிரிழப்பில்லா பேரிடர் மேலாண்மை இயக்கத்தைச் செயல்படுத்துவதற்கும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய உள்கட்டமைப்புகளை 'காலநிலை தாங்குதன்மை பெருந்திட்டம் 2045-இன் கீழ் மத்திய அரசின் மேம்பட்ட ஆதரவை தமிழ்நாடு நாடுகிறது.
- குலசேகரன்பட்டினத்தில் இந்திய விண்வெளித் துறையுடன் இணைந்து நிறுவப்பட்டுள்ள விண்வெளி உற்பத்தி மையத்தை தேசிய விண்வெளி உற்பத்தி மையமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். இதன்மூலம் உந்துபொருள் முதல் ஏவு வாகனங்கள் தயாரிப்பு வரை முழுமையான உற்பத்தித் திறன் உருவாகி, உலக விண்வெளிப் பொருளாதாரத்தில் இந்தியா முக்கியப் பங்காற்றும் வாய்ப்பு ஏற்படும்.
- தமிழகத்தின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் ரயில் வழித்தடங்களை உரிய நேரத்தில் மேம்படுத்துவது அவசியமாகும். எனவே, ஜி.எஸ்.டி. சாலையில் செங்கல்பட்டு முதல் திருச்சி வரையிலான பகுதியை ஆறுவழிச் சாலையாக மேம்படுத் துதல்; திருச்சி (பஞ்சப்பூர்) - ஜீயபுரம் - கரூர் பகுதியை ஆறுவழிச் சாலையாக மேம்படுத்துதல்; கரூர் - கோவை பகுதியை ஆறுவழிச் சாலையாக மேம்படுத்துதல்; மாதவரம் - சோழவரம் இடையே

உயர்த்தப்பட்ட வழித் தடம் அமைத்தல்; சென்னை முதல் கன்னியாகுமரி வரை அதிவேக ரயில் வழித்தடம் அமைத்தல் ஆகியவற்றைச் செயல்படுத்த வேண்டும்.

- எண்ம இணைப்பு வசதியைப் பொருத்தவரையில், தமிழ்நாட்டில் பாரத்நெட் இரண்டாம் கட்டத் திட்டம் சுமார் 97 சதவீதம் நிறைவடைந்துள்ளது. மீதமுள்ள கடைசிக் கட்ட இணைப்பு சவால்களைத் தீர்க்கவும், வலைப்பின்னல் செயல்பாடுகளைத் தொடர்ச்சியாக நிலைநிறுத்தவும், அனைத்து கிராம ஊராட்சிகளும் இணைய இணைப்புடன் இணைக்கப்படுவதையும் உறுதி செய்ய மத்திய அரசின் ஆதரவை கோருகிறேன்.
- ஒகேனக்கல் மூன்றாம் கட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்கு ரூ.2,283.40 கோடி அளவிலான உறுதியளிக்கப்பட்ட மத்திய நிதி உதவியை வழங்க வேண்டும். நிதிப் பொறுப்புணர்வு, சமூக முன்னேற்றம் மற்றும் மக்கள் தொகை நிலைநிறுத்தல் ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்பட்ட மாநிலங்கள் உரிய அங்கீகாரத்தையும் போதுமான ஆதரவையும் பெற வேண்டும். அவை எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது.
- மாநில அரசின் ஊரக வீட்டு வசதித் திட்டங்களுக்கும், மத்திய அரசின் வளர்ச்சியடைந்த இந்தியா வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்துக்கான திட்டத்தின் (விபி ஜி ராம் ஜி) கீழ் வேலைவாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன் என்றார் முதல்வர் ஜோசப் விஜய்.

2. மத்திய கிழக்கு போர்ச்சூழல் காரணமாக, இலங்கையில் மேலும் 13 லட்சம் மக்கள் தங்களின் அடிப்படை உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் பட்டினிக்குத் தள்ளப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா.வின் உலக உணவுத் திட்டம் அமைப்பு எச்சரித்துள்ளது.

(i) ஏற்கெனவே நடப்பு ஆண்டில் அடிப்படை உணவு உதவி தேவைப்படும் நிலையில் உள்ள 47 லட்சம் இலங்கை மக்களுடன் கூடுதலாக இவர்களும் இணையக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) இவ்விவகாரத்தை இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எழுப்பியதைத் தொடர்ந்து, பெரும் விவாதப்பொருளானது.

(iii) மத்திய கிழக்கு நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்படக் கூடிய உலக நாடுகளாக இலங்கை, சோமாலியா, ஆப்கானிஸ்தான் ஆகிய 3 நாடுகள் இந்த ஆய்வில் பிரதானமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

(iv) ஏற்கெனவே கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி, அதிலிருந்து மீண்டு வரும் இலங்கைக்கு, இப்புதிய உலகளாவிய நெருக்கடி பெரும் முட்டுக்கட்டையாக மாறியுள்ளது. இந்த இக்கட்டான சூழலை எதிர்கொள்ள இலங்கை அரசு ஏற்கெனவே எரி பொருள் நுகர்வுக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அவசர நடவடிக்கைகளை அமல்படுத்தியுள்ளது.

3. கனடாவில் 16 வயதுக்குள்பட்ட சிறார்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் வகையில் புதிய சட்ட மசோதா அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(i) கனடாவின் கலாசார அமைச்சர் மார்க் மில்லர் தாக்கல் செய்த மசோதாவின்படி, சமூக ஊடகங்கள் மட்டுமன்றி சாட்ஜிபிடி போன்ற ஏ.ஐ. சாட்பாட்களும்

முறைப்படுத்தப்படவுள்ளன. சிறார்களுக்குப் போதிய பாதுகாப்பு அம்சங்களை உறுதி செய்யும் நிறுவனங்களுக்கு மட்டும் தடையில் இருந்து விலக்கு அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4. சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) 10-ஆவது மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இங்கிலாந்து & வேல்ஸில் தொடங்குகிறது. முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து - இலங்கை அணிகள் மோதுகின்றன.

(i) ஜூலை 5-ஆம் தேதி நிறைவடையும் இப்போட்டியில் இந்தியாவுடன், பலமிக்க ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நடப்பு சாம்பியன் நியூஸிலாந்து உள்ளிட்ட அணிகளும் களம் காண்கின்றன.

(ii) 6 முறை சாம்பியனாக ஆதிக்கம் செலுத்தும் ஆஸ்திரேலியா, இந்த ஆண்டு 7-ஆவது முறையாகக் கோப்பை வெல்லும் முனைப்புடன் வருகிறது.

5. பிரான்ஸ், ஸ்லோவாக்கியா நாடுகளின் அழைப்பை ஏற்று, அந்நாடுகளில் வருகிற 13-ஆம் தேதி முதல் 18-ஆம் தேதி வரை பிரதமர் நரேந்திர மோடி சுற்றுப்பயணம் செய்யவுள்ளார்.

(i) தில்லியில் இருந்து வருகிற 13- ஆம் தேதி புறப்படும் பிரதமர் மோடி, முதல்கட்டமாக பிரான்ஸ் நாட்டின் துறைமுக நகரான நைஸுக்கு செல்கிறார். அங்கு அவர், பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரானை 14-ஆம் தேதி சந்தித்து பாதுகாப்பு, சிவில் அணுசக்தி உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

(ii) அப்போது இரு நாடுகளும் இணைந்து 12 புதிய திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பான முக்கிய அறிவிப்பு வெளியாக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. பாரத் இன்னோவேட்ஸ் எனப்படும் இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களின் கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தும் 3 நாள்கள் நிகழ்ச்சியை பிரதமர் மோடியும், மேக்ரானும் கூட்டாக தொடங்கி வைக்கவுள்ளனர்.

(iii) இதைத் தொடர்ந்து தைஸ் நகரில் இருந்து ஸ்லோவாக்கியா நாட்டுக்கு செல்லும் மோடி. 14- ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரை அந்நாட்டில் சுற்றுப்பயணம் செய்கிறார். அங்கு அந்த நாட்டு அதிபர் பீட்டர் பெல்லகிரினி, பிரதமர் ராபர்ட்ஃபிகோ உள்ளிட்டத் தலைவர்களை சந்தித்து அவர் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

(iv) இதையடுத்து பிரதமர் மோடி 16-ஆம் தேதி பிரான்ஸுக்கு மீண்டும் திரும்புகிறார். அங்கு அவர், ஏவியானில் 16,17-ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள ஜி7 அமைப்பு மாநாட்டில் கலந்துகொள்ளவரும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களை சந்தித்து இருதரப்பு விவகாரம் குறித்துப் பேசவுள்ளார்.

(v) பின்னர், பாரிஸில் ஜூன் 18- ஆம் தேதி நடைபெறும் ஐரோப்பாவில் மிகப்பெரிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க நிறுவன மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.

(vi) ஜி7 நாடுகளின் தலைவர்களுடனான சந்திப்பின்போது, மேற்காசிய போரினால் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம், எரிசக்தி விநியோகபாதிப்பு உள்ளிட்டவை குறித்து மோடி பேச்சுவார்த்தை நடத்துவார் என கூறப்படுகிறது.

(vii) ஜி7 மாநாட்டுக்கு வருகை தரும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பும், பிரதமர் மோடியும் சந்தித்து பேசுவதற்கான சாத்தியக் கூறுகளை இந்திய அரசும் அகமரிக்க அரசும்

ஆராய்ந்து வருவதாக சொல்லப்படுகிறது. ஆனால் அதுகுறித்து உறுதியான தகவல் இல்லை.

6. கேரளத்தில் ஷிகெல்லா பாக்டீரியா தொற்றால் பாதிக்கப்பட்ட 55 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக மாநில சுகாதாரத் துறை அமைச்சர் கே.முரளீதரன் தெரிவித்தார்.

(i) அசுத்தமான உணவு அல்லது குடிநீரை பருகினால் ஷிகெல்லா பாக்டீரியம் தொற்று ஏற்படவாய்ப்புள்ளது. பாதிக்கப்பட்ட நபர்களாலும் பரவக்கூடிய இந்த தொற்றால் வயிற்றுப்போக்கு, காய்ச்சல் மற்றும் வயிற்று வலி போன்ற பாதிப்புகள் ஏற்படும்.